செ.வெ.எண்:38 நாள்:26.01.2017

# அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் கிராமத்தில் சிறப்பு கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டார்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியம், வாலாஜாநகரம் ஊராட்சி, கோவில் வளாகத்தில், **"குடியரசு தினவிழாவையொட்டி"**, நடைபெற்ற **சிறப்பு கிராம சபைக் கூட்டம்** மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (26.01.2017) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது:-**

அடுத்த 15 ஆண்டுகளுக்கான திட்டமிடல் தொடர்பாக கிராம அளவில் வேளாண்மை வளர்ச்சி, கல்வி, வேலைவாய்ப்பு உருவாக்கம், பொது சுகாதாரம், நகரமயமாதல் குறித்து மத்திய அரசின் **நிதி அயோக்** (National Institution Of Transforming India) திட்டம் தயாரிப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இத்திட்டத்தினை பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

மேலும், அரசு வகுக்கும் திட்டங்களை மக்களாகக் கூடி தங்களுக்குள் பேசி தீர்மானமாக நிறைவேற்றி கொள்ளக்கூடிய வகையில் ஆண்டிற்கு நான்கு முறை சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி, மே தினம் ஆகிய நான்கு நாட்கள் சிறப்பு கிராம சபாக் கூட்டம் நடத்திட அரசு திட்டமிட்டுள்ளதன் அடிப்படையில், குடியரசு தினமான இன்று (26.01.2017) மாவட்டத்திலுள்ள 201 ஊராட்சிகளிலும் சிறப்பு கிராமசபாக் கூட்டம் நடத்தப்பட்டுவருகிறது. இந்த ஊராட்சியில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் வழங்கும் திட்டம், இந்திராகாந்தி நினைவு குடியிருப்பு திட்டம், தனிநபர் இல்ல கழிப்பறை கட்டும் பணிகள், பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் போன்ற திட்டங்களுக்காக தகுதிவாய்ந்த பயனாளிகள் இக்கூட்டத்தில் தேர்வு செய்து, அதற்கான ஒப்புதலை கிராமசபைக் கூட்டம் நிறைவேற்றியுள்ளது. கிராமப்புறங்களில் சுகாதாரம் பாதுகாக்கப்பட ஒவ்வொருவரும் தங்கள் வீடுகள் மற்றும் தெருக்களில் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இக்கிராமத்தில் அனைத்து பேருந்துகளும் நிறுத்தி செல்வதற்கும், பகுதி நேர நியாயவிலைக்கடை அமைக்கவும், குடிண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் விதத்தில் கூடுதலாக ஆழ்துளாய் கிணறு அமைக்கவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.யோகேஸ்வரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கபிலன், திரு.ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.